


சென்னை வடகிழக்கு மாவட்டம் – மாதவரம் பகுதிக்கழக பொருளாளர் சி.கே.கோபால் – நினைவில் வாழும் திருமதி.பூரணம் ஆகியோரின் மகனும், பாக இளைஞரணி அமைப்பாளருமான ஜெகதீஷ் – இராணிப்பேட்டை மாவட்டம், விண்டர்பேட்டை ஸ்ரீதர் – திருமதி.லதா ஆகியோரின் மகள் சுபாஷினி (எ) திவ்யா ஆகியோரின் திருமணத்தை கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து மணமக்கள் தந்தை பெரியாரும் – பகுத்தறிவும் போல, அண்ணாவும் – மாநில சுயாட்சியும் போல, கலைஞரும் – கழகமும் போல, கழகத்தலைவர் அவர்களும் – உழைப்பும் போல மணமக்கள் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தினார்.

### பெண்கள் குறித்து

# த.வெ.க.வினர் கொச்சையாகப் பதிவு செய்கின்றனர்!

## சட்டப்பேரவையில் பிரேமலதா விஜயகாந்த் குற்றச்சாட்டு!



சென்னை, செப். 8- பெண்கள் குறித்து த.வெ.க.வினர் அவதூறாக பேசி வருவதாக பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டினார்.

சட்டப்பேரவையில் பேசிய தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் பிரேமலதா விஜயகாந்த், சமூக வலைதளத்தில் த.வெ.க.வினர் பெண்கள் பற்றி அவதூறாக பேசி வருவதாகவும், அவர்கள் மீது முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

மேலும், போலியான ஐடிகளை உருவாக்கி இணையதளத்தில் த.வெ.க.வினர் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

### சபாநாயகர் செயல் – பேரவை மரபுகளுக்கு அப்பாற்பட்டது!

# முதல்வர் பதிலுரை; அரசியல் காழ்ப்புணர்ச்சியைத்தான் வெளிப்படுத்துகிறது!

## பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்த பின் – எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. பேட்டி!

**சென்னை, செப். 8-**

**பேரவை மரபுகள் பின்பற்றப்பட வேண்டும் சபாநாயகர் செயல் பேரவை மரபுகளுக்கு அப்பாற்பட்ட நிகழ்வாக உள்ளது என்றும், முதல்வரின் பதிலுரை அரசியல் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துகிறது என சட்டப் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்த பின்பு பேட்டியளித்த மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா குறிப்பிட்டார்.**

**சட்டப் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தபின் மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா அளித்த பேட்டி வருமாறு:-**



கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய விஷயங்கள், இவற்றை விளக்கமாக சொல்வதுதான் பதிலுரை. ஆனால், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை ஒரு அரசியல் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தக்கூடிய வகையிலே அவருடைய பதிலுரை அமைந்திருந்தது.

இந்த பதிலுரைக்கு பிறகு, நான் மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றேன். செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், அதேபோல தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், அவர்களும் காவல்துறைக்கு பொறுப்பாக சட்டமன்றத்திலே பதிலுரை ஆற்றியிருக்கிறார்கள்.

அபோதெல்லாம் அவர்கள் ஒரு வரம்பிற்குள் நின்று, நிச்சயமாக எதிர்க்கட்சிகளை விமர்சிப்பார்கள். ஆனால் அது ஒரு வரம்பிற்குள்ளேதான் இருக்கும். அதைத்தாண்டி இன்று தமிழ்நாட்டினுடைய முதலமைச்சரின் பதிலுரை அமைந்தது.

வழக்கமாக முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு பிறகு, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அது சார்ந்த சில கேள்விகளை எழுப்புவதற்கு சபாநாயகர் அனுமதி அளிப்பார். இதுதான் கடந்த காலங்களிலே நடைமுறையில் இருந்திருக்கக்கூடிய ஒரு மரபாக இருக்கிறது.

ஆனால் இன்று சட்டமன்றத்திலே, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிலளிக்க எழுந்து நிற்கும்போது, இடையில் சில விஷயங்களை சொல்லிவிட்டு, “உங்களுக்கு அனுமதி தருகிறேன்” என்று சொன்ன பேரவைத் தலைவர் அவர்கள், அதற்குப்பிறகு - முதலமைச்சர் அவர்கள் கூட “அவருக்கு வாய்ப்பளியுங்கள்” என்று சொன்ன பிறகு பதிலளிக்க வாய்ப்பளிக்காதது சட்டமன்ற மரபுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்வாக இருக்கின்றது.

இதைக் கண்டித்துதான் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நான் வெளிநடப்பு செய்திருக்கின்றேன். சட்டப்பேரவையிலே பேரவையினுடைய மரபுகள் பின்பற்றப்பட வேண்டும். எதிர்க்கட்சித் தலைவருக்கு பதிலளிப்பதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தான் இந்த வெளிநடப்பை செய்திருக்கின்றோம்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, செப்.8-

மதுரை வடக்கு மாவட்ட திமுக செயல் வீரர்கள் கூட்டம் வருகிற 9ஆம் தேதி புதன்கிழமை ஆலாத்தூர் பி.ஆர் திருமண மஹாலில் நடைபெற உள்ளதாகவும் இதில் திமுக நிர்வாகிகள் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க புதிதாக கழக மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, மேலும் கழகத் தலைவரின் ஆலோசனையின் படி அமைக்கப்பட்டுள்ள கழக மறு சீரமைப்புக்குழு மூலம் ஒன்றிய, நகர, பகுதிக்கழக, வட்டக் கழக, பேரூர் கழகங்கள் வாக்காளர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிதாக உருவாக்கப்பட உள்ளது இது தொடர்பான மதுரை வடக்கு மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (09.09.2026 - புதன்கிழமை ) காலை 10மணி அளவில் ஆலாத்தூர் பி.ஆர். திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர்



எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம் தலைமையில் தலைமை கழக பிரதிநிதிகள் பி.டி.சி செல்வராஜ், மூத்த வழக்கறிஞர் ரவீந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது

முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக, கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் தி.மு.க.வினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

# இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம், செப்.8–

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:–

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நாளை (09.09.2026 – புதன்கிழமை) மாலை 3.30, மணி அளவில் பரமக்குடி முதுகுளத்தூர் சாலை அருகே உள்ள கே.கே.மகாலில் மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை கழக பிரதிநிதிகள் தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி , மகளிர் அணி மாநில செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், முன்னாள் அமைச்சர், கழக தேர்தல் பணிக்குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் கே.கே.கதிரவன் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

ஆகவே இக்கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடி கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



பொருள் : 1.செப்டம்பர் 11 தியாகி இம்மானுவேல்சேகரனார் அவர்களின் நினை வேந்தலை முன்னிட்டு எதிர்கட்சி தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை,

2. அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து,

3.செப்.15, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் முப்பெரும் விழா,

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தாலுகா,பூசனூர் கிராமத்தில் கருப்பசாமி,ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ அங்காளஈஸ்வரி அம்மன் திருக்கோவில் ஆவணி கொடை விழாவை முன்னிட்டு, மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் இமானுவேல், முனியசாமி, பரமசிவப்பாண்டியன், ராமச்சந்திரன், முத்து கருப்பசாமி, முனியசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பரிந்துரை செய்த பிறகும் – எதிர்க்கட்சியினருக்கு பதிலளிக்க

# சபாநாயகர் மறுத்தது அதிர்ச்சியளிக்கிறது!

## சட்டப் பேரவையில் இருந்து வெளிநடப்புச் செய்தபின் தமீமுன் அன்சாரி பேட்டி!

**சென்னை, செப். 8-**

**முதல்வர் பரிந்துரை செய்தபிறகும் எதிர்க்கட்சியினருக்கு பதிலளிக்க சபாநாயகர் மறுத்தது அதிர்ச்சியளிக்கிறது என்று பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்த மனித நேய ஜனநாயக கட்சித் தலைவர் தமீமுன் அன்சாரி அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.**

**சட்டப் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்த மனிதநேய ஜனநாயக கட்சித் தலைவர் தமீமுன் அன்சாரி அளித்த பேட்டி வருமாறு:-**



கடந்த வெள்ளிக்கிழமை அமர்வு முதல் சட்டசபையில் திங்கள்கிழமை என்ன நடக்கும் என்ற பரபரப்பில், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, நாடு கடந்த தமிழ் நாட்டைச் சார்ந்த மக்களும் இருந்தார்கள். அந்த எதிர்பார்ப்பு என்பது ஆரோக்கியமான விடைகளைத் தரக்கூடியதாக அமையும் என்றுதான் எங்களைப் போன்றவர்களுமே எதிர்பார்த்திருந்தோம்.

வெள்ளிக்கிழமை அன்று, கடந்த வியாழக்கிழமை அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசு மீது பல்வேறு கேள்விகளை எழுப்பினார். எதிர்க்கட்சித் தலைவர் என்பது கேள்விகளை எழுப்புவதற்காக அவர்களுக்குத் தந்த வாய்ப்பைப் பயன்படுத்துவது என்பது எதார்த்தமானது. அந்த அடிப்படையில் தான் அவர் பல்வேறு சட்ட ஒழுங்கு குறித்த கேள்விகளை எழுப்பினார்.

நேற்றைய தினம் கூட தலைநகர் சென்னையில், ஆளுங்கட்சியை... தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் அநியாயமாக வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார். அந்த அளவுக்கு தலைநகரிலேயே ஒரு அசாதாரணமான ஒரு சூழல் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையில்தான், இன்றைய தினம் போலீஸ்துறை மானியக் கோரிக்கையின் மீது நம்முடைய முதல்வர் அவர்கள் பதிலளிக்கத் தொடங்கினார். கிட்டத்தட்ட 53 நிமிடங்களில் அவர் பதிலளித்தார்.

எழுதி தயாரிக்கப்பட்ட உரையையும் வாசித்தார். தானாகவே இருந்து பல்வேறு கருத்துக்களையும் சொன்னார்கள். அவர் கூறியதிலே சில கருத்துக்கள் உண்மையாக இருக்கலாம், சில கருத்துக்கள் மிகையாக இருக்கலாம், சில கருத்துக்கள் உண்மைக்கு மாறானதாக இருக்கலாம்.

ஆனால், முன்னாள் முதல்வர்களைப் பற்றியெல்லாம் குற்றச்சாட்டுகளை எழுப்புகின்றபோது, அந்தச் கட்சியைச் சேர்ந்தவர்கள் நியாயமாக எதிர்ப்பு தெரிவிப்பது வழக்கம். அவர்கள் எப்படி அமைதியாக இருப்பார்கள்? அதே நேரத்தில், எதிர்க்கட்சியினர் தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தக்கூடிய நேரத்தில், மீண்டும் சபாநாயகர்ட்ட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ‘ இந்தக் கருத்து சம்பந்தமாக பேசுவதற்கு ஒரு வாய்ப்பை’ கேட்கிறார்.

சட்டசபை என்பது ஜனநாயகம் தானே? கடந்த வியாழக்கிழமை கூட பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், “அதாவது சந்தேகம் இல்லாமல் இருக்க முடியாது, பேசிவிட்டு சண்டை போட முடியாது. இது ஜனநாயக களத்தில் ஆரோக்கியமான சண்டை இருக்கலாம்” என்று அவரே சொன்னார். அந்த அடிப்படையில் தான் இன்றைய தினம் முதல்வர் பேசி அமர்ந்ததுக்கு அப்புறம் எதிர்க்கட்சித் தலைவர் வாய்ப்பு கேட்கிறார்.

அப்போ வாய்ப்பு மறுக்கப்படுகிறது. மறுபடியும் திமுகவினர் தங்களுடைய ஆட்சேபணையையும் வெளிப்படுத்துறாங்க. ஜனநாயகத்தில் அதுவும் ஒரு அம்சம். அவங்க ஏதாவது வன்முறையில் ஈடுபட்டாங்களா? ஏதாவது அராஜகத்தில் ஈடுபட்டாங்களா? அதாவது தர்ணா என்பது நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் இயல்பாக நடக்கக்கூடியது. வன்முறை செய்தால் தான் தவறு.

ஆனால் என்ன செய்தாங்க? ஒரு கட்டத்தில் வந்து முதலமைச்சரே தலையிடுறார். முதலமைச்சரே தலையிட்டு என்ன சொல்றார்னா, “அவங்களுக்கு பதில் சொல்லக்கூடிய வாய்ப்பைத் தாருங்க”ங்கிறார். ஒரு முதலமைச்சரே அவருக்கு பதில் சொல்லக்கூடிய வாய்ப்பைத் தாருங்க என்கின்ற பொழுது, அது ஒரு பரிந்துரை. சபாநாயகருக்கு வானளாவிய அதிகாரம் இருக்கிறது என்பது வேறு விஷயம்.

ஆனால், உடனடியாக சபாநாயகர் இருக்கையிலேயே கோபப்பட்டார். கோபப்பட்டு, “நான் தான் முடிவு செய்வேன். உங்களுக்கு அனுமதி இல்லை” அப்படிங்கிறார். அதன் பிறகு தான் இறுதிக்கட்டமாக அவங்க வெளிநடப்பு செய்றாங்க.

திமுகவினர் வெளிநடப்பு செய்த பிறகு, நானும் கொங்கு மண்டல மக்கள் தேசியக் கட்சியினுடைய பொதுச்செயலாளர் ஈஸ்வரன் அவர்களும், மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்களும், “இந்த போக்குகள் முற்றிலும் சரியற்ற போக்கு. ஏனென்றால் ஒரு முதலமைச்சரே பரிந்துரைக்கிறார். ஒரு முதலமைச்சரே பரிந்துரைக்கும் போது கூட, வானளாவிய அதிகாரம் தங்களிடம் இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக சபாநாயகர் அதை மறுக்கலாமா?”

இந்த சபாநாயகரைத் தான் இந்த கூட்டத் தொடர்ல எதிர்க்கட்சியினரும் பாராட்டினாங்க, ஆளுங்கட்சியினரும் பாராட்டினாங்க. நேற்று கூட நாங்களெல்லாம் இந்த சபாநாயகரின் நடத்தை குறித்து பாராட்டினோம். அவர் ஆளுங்கட்சியை சேர்ந்தவராக தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்தாலும், அவருடைய நடவடிக்கை நன்றாக இருந்தது என்று சொல்லி. ஆனால் இன்று அவர் நடந்து கொண்டது, முதலமைச்சரே பரிந்துரைத்த பிறகு அவர் நடந்து கொண்டது உண்மையிலேயே எங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறது.

நாங்கள் வந்து எந்திரிச்சு வாய்ப்பு கேட்கிறோம். “எங்களுடைய கருத்துக்களை சொல்ல விடுங்க, எங்களுடைய கருத்துக்களை பேச அனுமதியுங்க” என்று சொல்லி கேட்கிறோம். அதற்கு வாய்ப்பு மறுக்கிறார்கள். அப்புறம் சபாநாயகர் என்ன சொல்றார்னா என்னை அழைக்கிறார். சபைக்கும் முன்பாக நடந்தது. என்னை அழைத்து, கூப்பிட்டு “என்ன விஷயம்?”னு கேட்கிறார்.

அப்ப நான் சொல்றேன், “முதலமைச்சர் வாய்ப்பு தாங்கனு சொன்ன பிறகும் கூட, நீங்க வந்து ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு பேச வாய்ப்பு மறுப்பது நியாயம் இல்லைண்ணே. அதை நாங்க தயவுசெய்து பேசணும், அவங்களுக்கு மீண்டும் வாய்ப்பு கொடுங்க”னு சொன்னால், “அதெல்லாம் முடியாது” அப்படிங்கிறார்.


நான் இருக்கைக்கு போயிட்டேன். ஏன்னா ஏதாவது ஒரு வகையில் வாய்ப்பு தருவாங்கனு. மீண்டும் எந்திரிச்சு வாய்ப்பு கேட்கிறேன். முதல்வர் உட்கார்ந்திருக்கார், அவை முன்னவரைப் பார்த்தும் சொல்றேன், “நீங்களும் கொஞ்சம் பரிந்துரைங்க”. ஜனநாயகத்துல காரசாரமான விவாதங்கள் இருக்கலாம், தவறில்லை. வரம்பு மீறாமல் இருக்கணும் அவ்ளோதான்.

ஆனால் திமுகவினர் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் அவங்க வெளிநடப்பு செய்திருக்காங்க. முக்கியமாக அவங்க வெளிநடப்பு செய்தது, முதலமைச்சருடைய உரையை எதிர்த்து அல்ல. அதை யாரும் தவறாக விளங்கிக் கொள்ளக் கூடாது. அவங்க முதலமைச்சரின் உரைக்கு மாற்றுக்கருத்து சொல்லணும்னு சொல்லி கேட்கிறாங்க. ஒரு முதலமைச்சரே வாய்ப்பை பரிந்துரை செய்த பிறகும் சபாநாயகர் மறுத்தது தவறு என்கிற அடிப்படையில் தான் வெளிநடப்பு செய்தாங்க.

இதை பேசுவதற்கு நானும் எழுந்து வாய்ப்பு கேட்கிறேன். அவை முன்னவர் அண்ணன் அமைச்சர் செங்கோட்டையன் அவர்கள்ட்டயும் சுட்டிக் காட்டினேன், “பரிந்துரை பண்ணுங்க”னு. அவங்களும் “உட்காருங்க உட்காருங்க, வாய்ப்பு தரலாம்”ங்கிறாங்க. ஆனால் ரெண்டு முறை உட்கார்ந்தும் வாய்ப்பு கிடைக்கல. அதன் பிறகுதான், இந்த சபாநாயகர் அவர்களுடைய இந்த நடவடிக்கை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

ஒரு நல்ல சபாநாயகர் கிடைத்தார் என்று நாமெல்லாம் எப்போதும் பாராட்டுகிறோம் அவரை. நான் எதுவும் குறை சொல்லல. ஆனால் இன்று நடந்த விதம் என்பது, சபாநாயகருக்கு இவ்வளவு கோபம் வரலாமா? சபாநாயகர் என்பவரே எல்லா உறுப்பினர்களுடைய பாதுகாப்பையும் உறுதி செய்யக்கூடியவரே, அவரை நம்ம எல்லாருமே கொண்டாடுறோம், இப்போதும் மதிக்கிறோம், இப்போதும் கொண்டாடுறோம். ஆனால் இவ்வளவு கடுமையைக் காட்டியிருக்கக் கூடாது. இது நல்லதல்ல என்பதுதான் எங்களுடைய கருத்து. அதைக் கண்டித்து மனிதநேய ஜனநாயக கட்சியின் சார்பில் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முத்தையாபுரம் பகுதியை சேர்ந்த மாவட்ட பிரதிநிதி சுரேஷ் இல்லத் திருமண விழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் மேகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.